# பொது (மறுவாழ்வு)த் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு
2024 – 2025

மானியக் கோரிக்கை எண். 38


## செஞ்சி கே.எஸ். மஸ்தான்

சிறுபான்மையினர் நலன் மற்றும்
வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர்



©
தமிழ்நாடு அரசு
2024

# பொருளடக்கம்


| வ. எண். | தலைப்பு | பக்கம் எண் |
| --- | --- | --- |
| 1. | முன்னுரை | 1–3 |
| 2. | அயலகத் தமிழர்கள் நலன் | 3–18 |
| 3. | முகாம் வாழ் இலங்கைத் தமிழர்கள் நலன் | 18–34 |
| 4. | பொருளாதார நெருக்கடியால் தமிழ்நாட்டிற்கு வரும் இலங்கைத் தமிழர்கள் | 34–35 |
| 5. | தாயகம் திரும்பியோர் | 35–39 |
| 6. | அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் | 39–43 |
| 7. | முடிவுரை | 43–45 |

# பொது (மறுவாழ்வு)த் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு 2024–2025

## 1. முன்னுரை

பொது மற்றும் மறுவாழ்வுத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையரகம் மூலம் இலங்கைத் தமிழரின் நலன், அயலகத் தமிழர் நலன் மற்றும் தாயகம் திரும்பியோரின் மறுவாழ்வினை பேணி பாதுகாத்திடுவது தொடர்பான பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மறுவாழ்வு ஆணையரகம் 1969–ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. அதன்மூலம் பர்மா, வியட்நாம், இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய இந்திய வம்சாவழியினருக்கான நலத் திட்டம் மற்றும் நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

பல்வேறு காலகட்டங்களில் 3,04,269 இலங்கைத் தமிழர்கள் இலங்கையில் மூண்ட உள்நாட்டுப் போர், இனக்கலவரம் காரணமாக அகதிகளாக 1983–இல் தமிழகத்திற்கு வந்தனர். அந்த

சமயத்தில், இலங்கைத் தமிழர்களுக்கான நிவாரணப் பணிகளும் இத்துறையின் வசம் ஒப்படைக்கப்பட்டன.

பன்னெடுங்காலந்தொட்டு தமிழர்கள் கல்வி, வணிகம் மற்றும் வாழ்வாதாரத்திற்கான வேலை வாய்ப்பினைத் தேடியும் உலகின் பல்வேறு நாடுகளுக்கும் புலம் பெயர்ந்து வருகின்றனர். இவ்வாறு, புலம்பெயர்ந்த அயலகத் தமிழர்களின் நலன்களைப் பேணி பாதுகாத்திட 2010–ஆம் ஆண்டு மறுவாழ்வு துறை இயக்குநரகத்தை வலுப்படுத்த "அகதிகள் மறுவாழ்வு மற்றும் தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர்கள் நல ஆணையரகம்" என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. மேலும், 2021–ஆம் ஆண்டு இவ்வாணையரகம் "அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை ஆணையரகம்" என பெயர் மாற்றம் செய்து ஆணை வெளியிடப்பட்டது.

தற்போது, அரசின் தொலைநோக்கு திட்டத்தின்படி, வெளிநாடுகளில் / மாநிலங்களில் பாதிக்கப்படும் அயலக தமிழர்களை கண்டறிந்து, அவர்களுக்கு போதுமான உதவிகளை செய்தல்,

வெளிநாடுகளில் இறந்தவர்களின் குடும்பத்தினருக்கு தேவையான உதவிகள் மற்றும் வாழ்வாதாரத்தினைப் பேணிக்காத்தல் தொடர்பான பணிகள் மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சரின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

## 2. அயலகத் தமிழர்கள் நலன்

அயலகத் தமிழர்களின் நலனுக்காக பல்வேறு முயற்சிகள் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையரகம் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அயலகத் தமிழர்களின் நலனுக்காக செயல்படுத்தப்படும் திட்டங்கள் பின்வருமாறு:

### 2.1. புலம்பெயர் தமிழர் நல வாரியம் அமைத்தல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 06.10.2021 அன்று வெளியிட்ட அறிவிப்பில், புலம்பெயர்ந்து வெளிநாடுகளிலும், இந்தியாவின் மற்ற மாநிலங்களிலும் வாழும் தமிழர் நலன் காக்க

"புலம்பெயர் தமிழர் நல வாரியம்" அமைக்கப்படும் என்று அறிவித்தார்.

மேலும், 2011–ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட வெளிநாடு வாழ் தமிழர் நலச் சட்டம் உட்பிரிவு 10(1) – அயலகத் தமிழர் நலன்களுக்காக வாரியம் உருவாக்கிட வழிவகை செய்கிறது. இதன் தொடர்ச்சியாக, அரசாணை வெளியிடப்பட்டு தலைவர் உள்ளிட்ட 15 உறுப்பினர்கள் கொண்ட "புலம்பெயர் தமிழர் நல வாரியம்" அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாரியத்தின் மூலம் கீழ்காணும் நலத்திட்டங்கள் அயலகத் தமிழர்களுக்காக நடைமுறைப்படுத்தப் படுகின்றன.

**அ) புலம்பெயர் தமிழர் நல வாரியத்தில் உறுப்பினர் பதிவு (அடையாள அட்டை)**

பிற மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளில் வசிக்கும் புலம்பெயர் தமிழர்கள் புலம்பெயர் தமிழர் நல வாரியத்தில் உறுப்பினராக பதிவு செய்து தங்களுக்கான புலம்பெயர் தமிழர் அடையாள அட்டையினை பெறலாம். புலம்பெயர் தமிழர் நல வாரியத்தில்

உறுப்பினர் பதிவிற்கான இணையதள பதிவு 15.05.2024 முதல் தொடங்கப்பட்டுள்ளது.

05.06.2024 வரை சுமார் 10,000 உறுப்பினர் விண்ணப்பங்கள் பெறப்பட்டு, அதனை ஆய்வு செய்து அனுமதி வழங்கும் பணி நடைபெற்று வருகிறது. புலம்பெயர் தமிழர் நல வாரியத்தில் உறுப்பினராகும் நபர்கள் கீழ்கண்ட திட்டங்களுக்கு தகுதியுடையவர் ஆவர்:

- **காப்பீட்டு திட்டம்**: தனி நபர் விபத்து காப்பீடு மற்றும் தீவிர சிகிச்சைக்கான காப்பீட்டு திட்டம்.
- **கல்வி மற்றும் திருமண உதவி தொகை**: வெளிநாடுகளில் இறந்துவிடும் அயலகத் தமிழர்களின் குழந்தைகளுக்கு கல்வி மற்றும் திருமணம் உதவித் தொகை வழங்கும் திட்டம்.

**ஆ) ஓய்வூதியத் திட்டம்**

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 12.02.2023–ஆம் நாளிட்ட செய்தி வெளியிட்டில், அயல்நாடுகளில் பணிக்குச் சென்று அங்கு எதிர்பாராதவிதமாக இறந்துவிடும் புலம்பெயர் தமிழர்

நலவாரிய உறுப்பினரின் குடும்பத்திற்கு மாத ஓய்வூதியம் ரூ.1,000 வழங்குவதற்கு அரசால் நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**இ) முன் பயண புத்தாக்கப் பயிற்சி மையங்கள்**

தமிழ்நாட்டில், இராமநாதபுரம், புதுக்கோட்டை, கன்னியாகுமரி, தஞ்சாவூர், பெரம்பலூர், சிவகங்கை மற்றும் விழுப்புரம் ஆகிய 7 மாவட்டங்களில் முன்பயண புத்தாக்கப் பயிற்சி மையங்கள் அமைக்கப்பட்டு, பணியின் பொருட்டு அயல்நாடுகளுக்கு செல்லும் தமிழர்களுக்கு பாதுகாப்பான மற்றும் சட்டப்பூர்வமான புலம்பெயர்தலுக்கான பயிற்சியும் விழிப்புணர்வும் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் இப்பயிற்சி மூன்று தன்னார்வு நிறுவனங்கள் மூலமாக நடத்தப்பட்டு வருகின்றன.

மேற்படி பயிற்சி மையங்கள் மார்ச் 12, 2024 முதல் தொடங்கப்பட்டது. 31.05.2024 வரை மாவட்ட வாரியாக பயிற்சி பெற்றவர்களின் விவரங்கள் பின்வருமாறு:

| வ. எண் | மாவட்டங்கள் | பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | புதுக்கோட்டை | 7,590 |
| 2. | கன்னியாகுமரி | 1,724 |
| 3. | சிவகங்கை | 960 |
| 4. | விழுப்புரம் | 478 |
| 5. | தஞ்சாவூர் | 1,724 |
| 6. | பெரம்பலூர் | 618 |
| 7. | இராமநாதபுரம் | 866 |
| | மொத்தம் | 13,960 |

**ஈ) 24x7 கட்டணமில்லா தொலைபேசி உதவி மையம்**

14.11.2023 முதல் வெளிநாடு வாழ் தமிழர்களுக்காக "24x7 கட்டணமில்லா உதவி மையம்" தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. வெளிநாடு வாழ் தமிழர்கள் புலம்பெயர்ந்து சென்றுள்ள நாடுகளில் எதிர் கொள்ளும் பல்வேறு பிரச்சனைகளுக்கு உடனடியாக தீர்வுகாண இந்த மையம் ஏற்படுத்தப்பட்டது. இந்த உதவி மையத்தின் முக்கிய குறிக்கோள் வெளிநாடு வாழ் தமிழர்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கைகள் / அழைப்புகளுக்கு உடனடியாக தீர்வு கண்டு

அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வது ஆகும். இம்மையம் வாரத்தில் 7 நாட்களும், நாளொன்றுக்கு 24 மணி நேரமும் செயல்பட்டு வருகிறது. இம்மையம் தொடங்கப்பட்டதிலிருந்து 30.04.2024 வரை 3,907 அழைப்புகள் பெறப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றில் தாயகம் மீட்பது தொடர்பான 166 புகார்களும் அடங்கும்.

**உ) சட்ட உதவி மையம்**

தமிழர்கள் அயல்நாடுகளில் எதிர்கொள்ளும் சட்ட சிக்கல்களுக்கு தீர்வு காண சட்ட உதவி மையம் உருவாக்கப்பட்டு, இம்மையம் மூலம் தமிழர்கள் எதிர்கொள்ளும் பின்வரும் பிரச்சனைகளுக்கு உதவி வழங்கப்படுகிறது.

I. அயல்நாடுகளில் பணியின் பொருட்டு செல்லும் தமிழர்கள் அங்கு தங்கள் முதலாளிகளால் எதிர்கொள்ளும் பிரச்சனைகளான உறுதியளிக்கப்பட்ட ஊதியம் வழங்காமை, மோசமான

பணிச்சூழல், விடுமுறை வழங்காமை, பணி ஒப்பந்தம் முடிந்தும் தாயகம் திரும்ப அனுமதி வழங்காமை, துன்புறுத்துதல்/சுரண்டல், சரியான உணவு, தங்குமிடம் வழங்காமை மற்றும் பணிப்பலன்கள் வழங்காமை ஆகியவை.

II. தாங்கள் செய்யாத குற்றங்களுக்காக தண்டனை அனுபவிக்கும் நபர்கள்.

III. ஒவ்வொரு வழக்குகளின் தன்மையின் அடிப்படையிலும்.

இச்சட்ட உதவி மையமானது தமிழ்நாட்டில் உள்ள ஒரு சட்ட நிறுவனத்தைச் சேர்ந்த இரண்டு சட்ட ஆலோசகர்களையும், ஓமன், துபாய், மலேசியா, சவுதி அரேபியா மற்றும் பஹ்ரைனைச் சேர்ந்த ஐந்து சட்ட ஒருங்கிணைப்பாளர்கள் / தன்னார்வலர்களையும் உள்ளடக்கியதாகும். தமிழ்நாட்டில் ஒரு சட்ட நிறுவனம் அமைப்பதற்கும், மேற்குறிப்பிட்டுள்ள ஐந்து நாடுகளில் சட்ட ஆலோசகர்களை நியமிப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

## 2.2. தாயகம் மீட்டல்

அ) இத்துறையானது, அயல்நாடுகளில் சிக்கித்தவிக்கும் தமிழர்களை தாயகம் மீட்பது மற்றும் அயல்நாடுகளில் இறந்த தமிழர்களின் பூத உடல்களை ஒன்றிய அரசு மற்றும் சம்பந்தப்பட்ட நாடுகளின் இந்திய தூதரகங்களின் உதவியுடன் தாயகம் கொண்டு வரும் பணிகளை மேற்கொள்கிறது. அதுமட்டுமின்றி, விமான நிலையம் வந்தடையும் தமிழர்களின் பூத உடல்கள் தமிழ்நாடு அரசின் கட்டணமில்லா அமரர் ஊர்தி சேவை மூலம் அவர்களின் சொந்த ஊர் வரை கொண்டு சென்று அவர்களது குடும்பத்தினரிடம் ஒப்படைத்து, வெளிநாட்டில் அவர்கள் பணிபுரிந்த நிறுவனங்களிடமிருந்து உதவிகளை பெற்று வழங்கவும் துணை புரிகிறது.

ஒவ்வொரு நிதியாண்டிற்கும் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையரகத்திற்கு ரூ.1.00 கோடி சுழல் நிதியாக வழங்கப்பட்டு அதன் மூலம் வெளிநாட்டில் சிக்கித்தவிக்கும் நபர்களை மீட்டு தாயகம் திரும்புதல் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அயல்நாடுகளில் இன்னலுற்ற தமிழர்களை தாயகம் மீட்பதற்காக 2023-2024-ஆம் நிதியாண்டில் இந்நிதியிலிருந்து ரூபாய்.90,11,465 செலவிடப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:

i) கம்போடியா, தாய்லாந்து, மியான்மர், சூடான் ஆகிய நாடுகளில் இருந்தும், அமர்நாத் மற்றும் மணிப்பூர் ஆகிய ஊர்களில் இருந்தும் தமிழகத்தைச் சேர்ந்த நபர்கள் மீட்கப்பட்டுள்ளனர்.

ii) இஸ்ரேல், பாலஸ்தீனத்தின் இடையே ஏற்பட்ட போர் காரணமாக, இஸ்ரேல் நாட்டில் சிக்கியிருந்த 126 தமிழர்கள் வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் ஒருங்கிணைப்புடன் பாதுகாப்பாக தமிழ்நாட்டிற்கு மீட்கப்பட்டுள்ளனர். மேலும், அவர்கள் தங்கள் இல்லம் வரை செல்ல தமிழ்நாடு அரசு சார்பில் இலவசமாக விமான பயணச்சீட்டு மற்றும் உணவு ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

iii) மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டவாறு மருத்துவ காரணங்களுக்காக தாயகம் திரும்புதல் மற்றும் சவூதி அரேபியாவில் ஏற்பட்ட தீ விபத்தில் மற்றவர்களை காப்பாற்றி தங்கள் உயிரை மாய்த்த இருவர் போன்ற நேர்வுகளில் தலா ரூ.10.00 இலட்சம் முதலமைச்சர் நிவாரண நிதியில் இருந்து வழங்கப்பட்டது.

நடப்பாண்டில் பல்வேறு அயல்நாடுகளில் உயிரிழந்த 279 தமிழர்களின் பூத உடல்கள் மீட்கப்பட்டு, தமிழக அரசின் "இலவச அமரர் ஊர்தி சேவை" மூலம் அவர்களது குடும்பத்தினரிடம் சேர்க்கப்பட்டுள்ளது.

**2.3. அயலகத் தமிழர்களின் பங்களிப்பை அங்கீகரித்தல் மற்றும் கலாச்சார மற்றும் அறிவுசார் ஒருங்கிணைப்பை ஊக்குவித்தல்:**

**அ) அயலகத் தமிழர் தினம்**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டவாறு, ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி

12–ஆம் நாள் அயலகத் தமிழர் தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது. இந்நிகழ்வானது பல்வேறு நாடுகளில் வசிக்கும் தமிழர்களின் பங்களிப்புடன் அவர்களை ஒருங்கிணைக்கும் விதமாகவும், ஊக்குவிக்கும் விதமாகவும் அமைகிறது. மேலும், நமது நாட்டின் பாரம்பரியம், கலை, இலக்கியம் மற்றும் பண்பாட்டினை அடுத்த தலைமுறையினருக்கு கொண்டு செல்வதே இந்நிகழ்வின் நோக்கமாகும்.

மேலும், மூன்றாம் ஆண்டு "அயலகத் தமிழர் தினம் 2024" மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 11.01.2024 மற்றும் 12.01.2024 ஆகிய இரு நாட்கள் "தமிழ் வெல்லும்" என்ற கருப்பொருளில் சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், 58 நாடுகள் மற்றும் இந்தியாவின் 11 மாநிலங்களில் உள்ள 282 தமிழ்ச் சங்கங்களைச் சார்ந்த 1,200க்கும் மேற்பட்ட நபர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் முதல் முறையாக அறிவியல் தொழில்நுட்பம், தமிழ் இலக்கியம், மருத்துவம், கல்வி,

சமூக மேம்பாடு, மகளிர், வணிகம், விளையாட்டு ஆகிய எட்டு பிரிவுகளில் சிறந்து விளங்கிய 13 அயலகத் தமிழர்களுக்கு "கணியன் பூங்குன்றனார் விருது" வழங்கப்பட்டது.

**ஆ) அயலகத் தமிழர்களுக்கு தமிழ் பயிற்றுவித்தல்**

தமிழ் இணைய கல்விக்கழகம் மூலம் வெளிநாடுகளிலும் பிற இந்திய மாநிலங்களிலும் வசிக்கும் குழந்தைகளுக்கு தமிழ் மொழியைக் கற்பிக்கும் முயற்சி இத்துறை மூலம் தொடங்கப்பட்டுள்ளது. தமிழ் இணைய கல்விக்கழகம் மூலம் தமிழ்ப் பாடங்களை பயிற்றுவிக்கும் முறையானது அடிப்படை, இடைநிலை மற்றும் மேம்படுத்தப்பட்ட நிலை என மூன்று வெவ்வேறு நிலைகளில் வழங்குவது போன்று தமிழ்ச் சங்கங்கள் மூலம் நிறுவப்பட்ட 168 மையங்கள் மூலம் இப்பாடங்கள் இணைய வழியில் வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்திற்கு 2022-2023-ஆம் நிதி ஆண்டில் ரூபாய் 12 இலட்சமும், 2023-2024-ஆம் ஆண்டில் ரூபாய் 44 இலட்சமும் நிதி ஒதுக்கீடு

பெறப்பட்டு, தமிழ் இணைய கல்விக்கழகத்திற்கு வழங்கப்பட்டு அதன் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2023–2024–ஆம் ஆண்டில், சுமார் 250 மாணவர்கள் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ளனர். இந்த மாணவர்கள் பெல்ஜியம், தென் கொரியா, சுவீடன், பங்களாதேஷ், தைவான் மற்றும் ஆஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளிலிருந்தும், குஜராத், பஞ்சாப், மகாராஷ்டிரா, தெலுங்கானா, கோவா மற்றும் உத்தரபிரதேசம் போன்ற பிற இந்திய மாநிலங்களிலிருந்தும் பங்கேற்றனர்.

**இ) வேர்களைத் தேடி**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழ் பாரம்பரியத்தின் வேர்களுடன் தொடர்பைப் புதுப்பிக்கும் வகையில், ஒவ்வொரு ஆண்டும், வெளிநாட்டில் குடியேறிய தமிழர்களின் வாரிசுகளில் 200 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு தமிழ்நாட்டில் பண்பாட்டு சுற்றுலா பயண திட்டம் செயல்படுத்தப்படும் என்று அறிவித்தார்.

இத்திட்டத்தின் முதற்கட்டமாக ஆஸ்திரேலியா, பிஜி, இலங்கை மற்றும் கனடா ஆகிய நாடுகளில் இருந்து 57 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு, 27.12.2023 முதல் 10.01.2024 வரை தமிழ்நாட்டிலுள்ள கலாச்சார சுற்றுப்பயணத்திற்கு அழைத்து செல்லப்பட்டனர். இச்சுற்றுப்பயணத்தில் தமிழ்நாட்டின் தொல்பொருள் தளங்கள், வரலாற்று நினைவுச்சின்னங்கள், யுனெஸ்கோவின் உலக பாரம்பரியச் சின்னங்கள் மற்றும் கல்வி நிலையங்களுக்கு அழைத்து செல்லப்பட்டனர். தமிழர் கலை, பண்பாடு, தொல்லியல், ஆராய்ச்சி ஆகிய துறை வல்லுநர்களுடன் உரையாடும் வாய்ப்பும் மாணவர்களுக்கு கிடைத்தது.

இத்திட்டத்தின் இரண்டாம் கட்டம் ஆகஸ்ட் 2024–இல், தொடங்க திட்டமிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

**ஈ) தமிழ்ச்சங்கங்களுக்கு நிதியளித்தல்**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், புலம்பெயர்ந்த தமிழர்களால் உருவாக்கப்பட்ட தமிழ்ச்

சங்கங்களை அங்கீகரித்து, பின்னர் அவர்களின் நிகழ்ச்சிகளுக்கு நிதியுதவி வழங்கப்படும் என அறிவித்தார். இத்திட்டம் தமிழ்ச்சங்கங்கள் மூலம் தமிழ் மொழி, கலை மற்றும் கலாச்சாரத்தை மேம்படுத்துதல் மற்றும் புலம்பெயர்ந்த தமிழர்களிடையே ஒற்றுமையை வளர்த்தல் ஆகிய இரண்டு குறிக்கோள்களை அடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இத்திட்டம் தொடர்பான நிலையான செயல்பாட்டு நடைமுறை (Standard Operating Procedure) தயாரிக்கும் பணிகள் நடைப்பெற்று வருகின்றன.

**உ) எனது கிராமம்**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அயல்நாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் பங்களிப்பினை கொண்டு தமிழ்நாட்டில் அவர்களது சொந்த ஊர்களை மேம்படுத்தும் பொருட்டு "எனது கிராமம்" என்ற திட்டம் அறிவிக்கப்பட்டது. இத்திட்டத்திற்காக 2023–2024–ஆம் ஆண்டில் மூன்று அயலகத் தமிழ் பயனாளிகளிடம் இருந்து ரூபாய் 60 லட்சம் நிதி பெறப்பட்டுள்ளது. இத்திட்டம்

தொடர்பான நிலையான செயல்பாட்டு நடைமுறை (Standard Operating Procedure) தயாரிக்கும் பணிகள் நடைப்பெற்று வருகின்றன.

## 3. முகாம் வாழ் இலங்கைத் தமிழர்கள் நலன்

மாநிலத்தில் உள்ள 29 மாவட்டங்களில் 105 முகாம்களில் (திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள இரண்டு சிறப்பு முகாம்கள் உட்பட) 30.11.2023 அன்றுள்ள நிலவரப்படி 19,525 குடும்பங்களைச் சேர்ந்த 58,015 நபர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு ஒன்றிய அரசு, மாநில அரசின் வழிகாட்டுதல்களுடன் நிர்ணயிக்கப்பட்ட விதிமுறைகளின்படி, உணவு, இருப்பிடம், குடிநீர், மின்சாரம் என பல்வேறு நிவாரண உதவிகள் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன.

### 3.1. வீடுகள் கட்டுதல் மற்றும் அடிப்படை வசதிகள் மேம்படுத்துதல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சட்டப்பேரவை விதி எண் 110–ன் கீழான அறிவிப்பில், முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு அவர்கள்

குடியிருக்கும் பழுதடைந்த கட்டிடங்களுக்கு மாற்றாக 7,469 புதிய வீடுகள் கட்டித் தரப்படும் என 27.08.2021 அன்று அறிவித்ததன்படி, முதற்கட்டமாக, 3,510 புதிய வீடுகள் கட்டுவதற்கு ரூபாய் 176.02 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கீழ் தொடர்புடைய மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் 3,510 வீடுகளில் 1,591 வீடுகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 17.09.2023 அன்று திறந்து வைக்கப்பட்டு பயனாளிகளுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன. மேலும், 857 புதிய வீடுகள் மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு பயனாளிகளுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன. மேலும், கூடுதலாக கட்டி முடிக்கும் தருவாயிலுள்ள திருப்பத்தூர் மாவட்டம், மின்னூர் முகாமில் 76 வீடுகளும், தூத்துக்குடி மாவட்டம், மாப்பிள்ளையூரணி முகாமில் 56 வீடுகளும் பயனாளிகளுக்கு ஒப்படைக்க தயார் நிலையில் உள்ளன. மீதமுள்ள 930 வீடுகள்

விரைவில் பயனாளிகளுக்கு ஒப்படைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து, இரண்டாம் கட்டமாக, 3,959 புதிய வீடுகள் கட்டுவதற்கு ரூபாய் 224.28 கோடிக்கு நிர்வாக அனுமதியும், ரூபாய் 111.29 கோடிக்கு நிதி ஒதுக்கீடும் செய்து ஆணைகள் பெறப்பட்டு, 16 மாவட்டங்களில் உள்ள 35 முகாம்களில் வீடுகள் கட்டும் பணியினை மேற்கொள்ள ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைக்கு ஆணைகள் வழங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வரும் நிலையில், விருதுநகர் மாவட்டம், அனுப்பன்குளம் முகாமில் 24 புதிய வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு பயனாளிகளுக்கு ஒப்படைக்க தயார் நிலையிலும், 2024–ஆம் ஆண்டின் நவம்பர் மாதத்திற்குள் 3,935 புதிய வீடுகள் கட்டி முடிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளன.

முகாம்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காக, குடிநீர், கழிவறை, மின்சாரம் மற்றும் கழிவுநீர்க்கால்வாய் வசதிகளை கூடுதலாக செய்து கொடுக்க ஏதுவாக ரூபாய் 30 கோடிக்கு நிர்வாக

ஒப்புதல் வழங்கப்பட்டது. இதில், முதற்கட்டமாக 2022–2023–ஆம் நிதியாண்டில் ரூபாய் 10 கோடியும், 2023–2024–ஆம் நிதியாண்டில் ரூபாய் 20 கோடியும் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு, அதை செயல்படுத்தும் பொருட்டு மாவட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. மேலும், இலங்கைத் தமிழர் முகாம்களில் செயல்பட்டுவரும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 10 தொழிற்கூடம் அமைப்பதற்காக 2023–2024–ஆம் நிதியாண்டில் கூடுதலாக ரூபாய் 3 கோடி நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

## 3.2. இலங்கைத் தமிழர் ஆண்டு (வாழ்வாதார) மேம்பாட்டுநிதி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சட்டமன்றப் பேரவை விதி எண்110–ன்கீழ், 27.08.2021 அன்று அறிவித்தபடி, 29 மாவட்டங்களில் உள்ள இலங்கைத் தமிழர் முகாம்களில் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு பணிகளை மேம்படுத்திட 2023–2024–ஆம்

நிதியாண்டில் ரூபாய் 5 கோடி நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

## 3.3. கலைஞர் மகளிர் உரிமை தொகை

கலைஞர் மகளிர் உரிமை தொகை திட்டம், பொருளாதாரத்தில் பின்தங்கிய பெண்களுக்கு மாதந்தோறும் ரூபாய் 1,000 நிதியுதவி வழங்க தமிழக அரசால் தொடங்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் முகாம்களில் வசிக்கும் குடும்ப தலைவிகளுக்கு இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. தற்போது இத்திட்டத்தின் மூலம் 11,939 குடும்பங்கள் பயனடைந்துள்ளன.

## 3.4. மகளிர் சுய உதவிக் குழுக்கள்:

இலங்கைத் தமிழர் முகாம்களில் செயல்படும் 321 சுய உதவி குழுக்களுக்கு முகாம்வாழ் இலங்கைத் தமிழ்ப் பெண்களின் பொருளாதாரம் மற்றும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த "சமூக முதலீட்டு நிதியாக" தலா ரூபாய் 50,000 வீதம் 2020–ஆம் ஆண்டில் வழங்கப்பட்டது.

தற்போது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சட்டமன்றப் பேரவை விதி எண்.110–ன் கீழான அறிவிப்பின்படி, ரூபாய் 75,000 வீதம் ஒவ்வொரு சுய உதவி குழுவிற்கும் கூடுதலாக வழங்கப்பட்டுள்ளது. இதற்காக ரூபாய் 2.40 கோடி வழங்கப்பட்டுள்ளது. மேலும், புதிதாக உருவாக்கப்பட்ட 300 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு, சமுதாய முதலீட்டு நிதியாக கூடுதலாக ரூபாய் 1.25 இலட்சம் வழங்கப்பட்டு வருகின்றது. இப்பணிக்காக இதுவரை ரூபாய் 3.75 கோடி மகளிர் மேம்பாட்டு நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இந்நாளது வரை 266 குழுக்களுக்கு சமுதாய முதலீட்டு நிதி வழங்கப்பட்டது. மீதமுள்ள 35 குழுக்களுக்கு தொகை வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 3.5. திறன் மேம்பாட்டு பயிற்சி

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களின் வாழ்வாதாரம் மற்றும் வேலைவாய்ப்பை மேம்படுத்த 110 விதியின் கீழ்

27.08.2021 அன்று சட்டமன்றப் பேரவையில் வெளியிட்ட அறிவிப்பின்படி 5000 இலங்கைத் தமிழ் இளைஞர்களுக்கு தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மூலம் மாவட்டந்தோறும் முகாம்களில் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டு, 2,404 நபர்களுக்கு பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. 2023–2024–ஆம் நிதியாண்டில் 16 நபர்களுக்கு தற்போது வேலை வாய்ப்புடன் கூடிய திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

### 3.6. துணிமணிகள்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவை விதி எண்.110–ன் கீழ் 27.08.2021 அன்று அறிவிக்கப்பட்டதன் அடிப்படையில், உயர்த்தப்பட்ட விலையில் இலவச ஆடைகள் 2021–2022–ஆம் நிதியாண்டில் கோ–ஆப்டெக்ஸ் மூலமாகவும், 2022–2023–ஆம் நிதியாண்டில் தமிழ்நாடு துணி நூல் கழகம் மற்றும் கோ–ஆப்டெக்ஸ் மூலமாகவும், 2023–2024–ஆம் நிதியாண்டில் ரூபாய் 5,42,76,869 செலவில் தமிழ்நாடு

துணி நூல் கழகம் மூலமாகவும் இலங்கைத் தமிழர்களுக்கு துணிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

### 3.7. பாத்திரங்கள்

8 வகையான சமையல் பாத்திரங்கள் ரூபாய் 250 மதிப்பில், ஒவ்வொரு முகாம்வாழ் இலங்கைத் தமிழர் குடும்பத்திற்கும் இலவசமாக இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை வழங்கப்பட்டு வருகிறது. தற்போது, ரூபாய் 250 மதிப்பில் பாத்திரங்கள் வாங்கி வழங்க இயலாத நிலை உள்ளது. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவை விதி எண் 110–ன் கீழ் 27.08.2021 அன்று அறிவிக்கப்பட்டவாறு, 2023–2024–ஆம் நிதியாண்டில் 8 வகையான எவர்சில்வர் பாத்திரங்கள் ரூபாய் 1,285 மதிப்பில் சேலம் இந்திய உருக்காலை நிறுவனத்திடமிருந்து (SAIL) கொள்முதல் செய்யப்பட்டு முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு வழங்குவதற்கு ஏதுவாக ரூபாய் 2,50,54,930 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 3.8. விலையில்லாச் சமையல் எரிவாயு இணைப்பு மற்றும் அடுப்பு, மானிய விலையில் எரிவாயு உருளை வழங்குதல்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 27.08.2021 அன்று சட்டமன்றப் பேரவை விதி எண் 110–ன் கீழ் வெளியிட்ட அறிவிப்பில், முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு ரூபாய் 7 கோடி செலவில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் விலையில்லா எரிவாயு இணைப்பு மற்றும் இலவச அடுப்பு வழங்கப்படும் என்றும், ஒரு குடும்பத்திற்கு வருடம் ஒன்றிற்கு அதிகபட்சம் 5 எரிவாயு உருளைக்குத் தலா ரூபாய் 400 வீதம் மானியத்தொகை வழங்கப்படும் என்றும் அறிவித்தார்.

2021–2022–ஆம் ஆண்டு முதல் தற்போது வரை 6,481 புதிய எரிவாயு இணைப்பு 16,305 குடும்பங்களுக்கு ரூபாய் 1,30,44,000 செலவில் வழங்கப்பட்டுள்ளது. மேலும், 2023–2024–ஆம் நிதியாண்டில் ரூபாய் 3,44,58,000 செலவில் 5 எரிவாயு உருளைகளுக்கு தலா ரூபாய் 400 மானியத்தொகை

வீதம் 17,229 இலங்கைத் தமிழர் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

**3.9. பணக்கொடை**

முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர பணக்கொடையினை மாநில அரசால் உயர்த்தி வழங்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்ற பேரவை விதி எண்.110–இன் கீழ் 27.08.2021 அன்று அறிவித்தார். அவ்வறிவிப்பின்படி கீழ்காணும் உயர்த்தப்பட்ட வீதத்தில் மாதாந்திர பணக்கொடை வழங்க ஆணை வெளியிடப்பட்டு அதன்படி வழங்கப்பட்டு வருகிறது.

| வ. எண். | விவரங்கள் | பழைய தொகை ரூ. | 01.09.2021 முதல் புதிதாக உயர்த்தப்பட்ட தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | குடும்பத் தலைவர் | 1,000/– | 1,500/– |
| 2. | ஒவ்வொரு கூடுதல் உறுப்பினர் (12 வயது அதற்கு மேல்) | 750/– | 1,000/– |

| | | | |
|---|---|---|---|
| 3. | சிறியவர்கள் (12 வயதிற்கு உட்பட்டவர்கள்) | 400/– | 500/– |

### 3.10. அரிசி மானியம்:

முகாம்களில் வசிக்கும் ஒவ்வொரு இலங்கைத் தமிழர் குடும்பங்களில் பெரியவர்களுக்கும், 8 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கும் ஒவ்வொரு மாதமும், ஒருவருக்கு முறையே 12 கிலோ மற்றும் 6 கிலோ அரிசி வழங்கப்படுகிறது. இதில், ஒவ்வொரு குடும்பத்திற்கும், முதல் 20 கிலோ அரிசி இலவசமாகவும், கூடுதல் அரிசி ஒரு கிலோ ரூ.0.57 என்ற விலையிலும் வழங்கப்பட்டு வந்தது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண் 110–ன் கீழ் 27.08.2021 அன்று முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கான மொத்த அரிசியும் இலவசமாக வழங்கப்படும் எனவும், இதற்கான கூடுதல் செலவினம் ரூபாய் 19 இலட்சத்தினை மாநில அரசே ஏற்கும் எனவும் அறிவித்து, அதன்படி ஆணை

வெளியிடப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி, எண்ணெய், சர்க்கரை என அனைத்து அத்தியாவசியப் பொருட்களும் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் இலங்கைத் தமிழர்களுக்கு சலுகை விலையில் வழங்கப்பட்டு வருகின்றன.

**3.11. கல்வி உதவித் தொகை:**

12–ஆம் வகுப்பு வரை படிக்கும் சுமார் 11,973 மாணவர்கள் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாமில் உள்ளனர். இவர்களுக்கு, இலவசக் கல்வித் திட்டம் 12–ஆம் வகுப்பு வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. மேலும், தமிழக மாணவர்களுக்கு வழங்கப்படுவது போல் இலவச சீருடைகள், மதிய உணவு, புத்தகங்கள் மற்றும் இலவச பேருந்துப் பயண அட்டைகள் வழங்கப்படுகின்றன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டப் பேரவை விதி எண்.110–ன் கீழ் 27.08.2021 அன்று அறிவித்தவாறு உயர்த்தப்பட்ட வீதத்தில் கல்வி உதவித் தொகை பின்வருமாறு வழங்கப்பட்டு வருகிறது:

| வ. எண் | படிப்பு | உயர்த்தப்பட்ட கல்வித் தொகை (2021–2022 முதல்) ரூ. |
|---|---|---|
| 1. | பட்டயப்படிப்பு | 10,000/– |
| 2. | இளநிலை கலை மற்றும் அறிவியல் பட்டப்படிப்பு | 12,000/– |
| 3. | இளநிலை தொழிற்கல்வி பட்டப்படிப்பு | 20,000/– |
| 4. | இளநிலை பொறியியல் படிப்பு | முழுச் செலவினம் |
| 5. | முதுநிலை பட்டப்படிப்பு | முழுச் செலவினம் |

கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், தொழில்நுட்பக் கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் போன்றவற்றில் உயர்கல்விக்காக இலங்கைத் தமிழ் மாணவர்கள் பொதுப்பிரிவுக்கான கலந்தாய்வு மூலம் ஒற்றைச் சாளர முறையில் தகுதியின் அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். கூடுதலாக, பின்வரும் மாணவர்களுக்கான முழு கல்வி கட்டணம் மற்றும் விடுதி கட்டணங்களை அரசே ஏற்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

- பொறியியல் படிப்புகளில் சேரும் அனைத்து முகாம் வாழ் இலங்கைத் தமிழ் மாணவர்களுக்கு மதிப்பெண் அடிப்படையில் முதல் 50 மாணவர்கள்.
- வேளாண்மை / வேளாண்மைப் பொறியியல் படிக்கும் மதிப்பெண் அடிப்படையில் முதல் 5 மாணவர்கள்.
- முதுகலை பட்டப்படிப்பில் சேரும் மாணவர்கள்.

மேற்படி உயர்த்தப்பட்ட விகிதத்தில் கல்வி உதவித் தொகை வழங்கும் பொருட்டு ரூபாய் 3.28 கோடி நிதி தமிழக அரசிடமிருந்து விடுவிக்கப்பட்டு, 2022-2023-ஆம் ஆண்டில் 1,825 மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

2023-2024-ஆம் ஆண்டிற்கு 1,548 மாணவர்களுக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டு உள்ளன.

### 3.12. நீண்ட நாள் தீர்வுகளுக்கான ஆலோசனை குழு

27.08.2021 அன்று சட்டமன்றத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்ட அறிவிப்பின்படி, விதி 110ன் கீழ், G.O.(MS) No.902, பொது (மறுவாழ்வு–1)த் துறை, நாள் 25.10.2021–ன்படி, முகாமிற்கு உள்ளேயும் வெளியேயும் இலங்கைத் தமிழர்கள் எதிர்கொள்ளும் சவால்களுக்கு தீர்வுகளை ஆராய்வதற்கான ஆலோசனைக் குழு, குடியுரிமைக்கான சாத்தியக் கூறுகளை ஆராய்வதற்கும், இலங்கைத் தமிழர்கள் இலங்கைக்குத் திரும்புவதற்கு உதவுவதற்கும், தமிழ்நாடு அரசாங்கத்திற்கு ஒரு செயல் திட்டத்தை முன்மொழிவதற்கும் ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டது.

மேற்படி ஆலோசனைக் குழுவில் மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் புலம்பெயர்ந்த தமிழர்கள் நலத்துறை அமைச்சர், மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர், பொதுத் துறைச் செயலாளர், மறுவாழ்வுத்

துறை ஆணையர் மற்றும் அரசின் உயர் அதிகாரிகள், அரசு சார்பற்ற நிறுவனங்களின் உறுப்பினர்கள், முகாமில் உள்ள இலங்கைத் தமிழர்களின் பிரதிநிதி மற்றும் முகாம் அல்லாத இலங்கைத் தமிழர்களுக்கான பிரதிநிதி கொண்ட குழு அமைக்கப்பட்டது.

குழுவின் இடைக்கால அறிக்கை 29.09.2023 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டது. குழுவின் இடைக்கால அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து, முகாம்கள் மற்றும் முகாமிற்கு வெளியே வாழும் இலங்கைத் தமிழர்களின் நீடித்த தீர்வுகள் மற்றும் தற்சார்பு தொடர்பான அரசாங்கத்தால் நிறுவப்பட்ட ஆலோசனைக் குழுவின் இடைக்கால அறிக்கையின் அடிப்படையில் அரசால் தேவையான தொடர் நடவடிக்கைகள் சம்பந்தப்பட்ட துறைகள் மூலமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**3.13. சிறப்பு முகாம்**

அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையரகம் மூலமாக தற்சமயம் தமிழகத்தில் திருச்சிராப்பள்ளி மற்றும் இராமநாதபுரம்

மாவட்டங்களில் தலா ஒரு சிறப்பு முகாம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த முகாமில், குற்றப்பின்னணி உள்ள / விசாரணையில் உள்ள இலங்கைத் தமிழர்களுக்கும் தங்குமிடம் வழங்கப்பட்டுள்ளது. தற்போது 30.04.2024 நிலவரப்படி, இந்த சிறப்பு முகாமில் 70 இலங்கைத் தமிழர்கள் வெளிநாட்டினர் சட்டம், 1946–இன் பிரிவு 3(2)(e)–இன் கீழ் தங்கவைக்கப்பட்டுள்ளனர். சிறப்பு முகாம்களில் அவர்களின் நடமாட்டம் முகாமிற்குள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதால், அவர்களுக்கு சமைத்த உணவு ஒருநாளைக்கு ரூபாய் 175 வீதத்தில் வழங்கப்படுகிறது.

**4. பொருளாதார நெருக்கடியால் தமிழ்நாட்டிற்கு வரும் இலங்கைத் தமிழர்கள்**

01.05.2024 நிலவரப்படி, இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் உணவுத்தட்டுப்பாடு காரணமாக தமிழ்நாட்டிற்கு வரப்பெற்ற 310 நபர்கள் இராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் முகாமில் தங்கவைக்கப்பட்டு இவர்களுக்கு

தேவையான அடிப்படை வசதிகள் மற்றும் துணிமணிகள் வழங்கப்படுவதுடன், நாள் ஒன்றுக்கு ரூபாய் 175 வீதம் உணவும் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.

## 5. தாயகம் திரும்பியோர்

இந்திய வம்சாவழியைச் சேர்ந்த சுமார் 4,61,639 தமிழின மக்கள் இலங்கையிலிருந்தும், சுமார் 1,44,445 தமிழின மக்கள் பர்மாவிலிருந்தும், 2055 தமிழன மக்கள் வியட்நாமிலிருந்தும் இந்தியாவிற்கு திரும்பியுள்ளனர். தமிழ்நாட்டைப் பூர்வீகமாகக் கொண்ட இத்தமிழர்களின் நலன் பேணவும், வாழ்வாதார மேம்பாட்டிற்காகவும் தனியாக இத்துறை உருவாக்கப்பட்டது. இவர்களில், பெரும்பான்மையினர் தமிழ்நாட்டிலும், கர்நாடகா, கேரளா மற்றும் ஆந்திரபிரதேச மாநிலங்களிலும் வசித்து வருகின்றனர். இவர்களுக்கு தமிழ்நாடு அரசு பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது.

## 5.1. ரெப்கோ வங்கி

ரெப்கோ வங்கி (தாயகம் திரும்பியோர் கூட்டுறவு நிதி மற்றும் மேம்பாட்டு வங்கி), இலங்கை, பர்மா, வியட்நாம் மற்றும் பிற நாட்டிலிருந்து தாயகம் திரும்பிய மக்களின் மறுவாழ்விற்காக மத்திய அரசால் நிறுவப்பட்டு, மத்திய அரசு மற்றும் தமிழ்நாடு, ஆந்திர பிரதேசம், தெலுங்கானா, கேரளா மற்றும் கர்நாடகா ஆகிய 5 மாநில அரசுகளின் பங்கு முதலீடு கொண்டு இயங்கி வருகிறது. இந்த வங்கி முதன் முதலில் மெட்ராஸ் கூட்டுறவு சங்கங்களின் சட்டம், 53/1961ன் கீழ் 09.09.1969 அன்று பதிவு செய்யப்பட்டது. வங்கியின் நடவடிக்கை 19.11.1969 முதல் தொடங்கப்பட்டது. பல மாநில கூட்டுறவு சங்கங்களின் சட்டம் 1984 மற்றும் 2002 அமலுக்கு வந்தது முதல் இந்த வங்கி மேற்படிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டதாக கருதப்படுகிறது. தற்பொழுது இந்த வங்கி பல மாநில கூட்டுறவு சங்கங்களின் சட்டம் 2002ன் கீழ் செயல்பட்டு வருகிறது. இந்த வங்கி மத்திய

உள்துறை அமைச்சகத்தின் FFR பிரிவின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டுவருகிறது.

தற்பொழுது வங்கி 108 கிளைகளை தென் மாநிலங்களான தமிழ்நாடு, ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகா, கேரளா மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசத்திலும் கொண்டு இயங்கி வருகிறது. இந்த வங்கியின் தலைமையிடம் சென்னையில் உள்ளது.

31.03.2024 அன்று வங்கியின் மூலதனத்தின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| வ. எண் | முதலீட்டாளர்கள் | மூலதன தொகை (இலட்சங்களில்) | சதவீதம் % |
|---|---|---|---|
| 1. | ஒன்றிய அரசு | 7632.00 | 50.14 |
| 2. | தமிழக அரசு | 713.00 | 4.68 |
| 3. | ஆந்திர பிரதேச அரசு | 104.77 | 0.69 |
| 4. | தெலுங்கானா அரசு | 74.88 | 0.49 |
| 5. | கேரள அரசு | 61.16 | 0.40 |
| 6. | கர்நாடக அரசு | 17.47 | 0.11 |
| 7. | தனி நபர்கள் | 6621.73 | 43.49 |
| | மொத்தம் | 15225.01 | 100.00 |

**5.1.1. நிதியாண்டு 2023–2024க்கான ரெப்கோ வங்கியின் தற்போதைய நிலை**

- வங்கியின் வர்த்தகம் 10.65% வளர்ச்சி கண்டு 31.03.2024 அன்று உள்ளபடி ரூபாய் 19,665 கோடியை எட்டியுள்ளது.

- வங்கியின் நிகர லாபம் சுமார் 3.37% வளர்ச்சி பெற்று ரூபாய் 69.69 கோடியாக உள்ளது.

- தாயகம் திரும்பிய பயனாளிகளின் எண்ணிக்கை 45,001 ஆக உள்ளது.

**5.1.2. நிதியாண்டு 2024–2025க்கான ரெப்கோ வங்கியின் கண்ணோட்டம்**

- வங்கியின் வர்த்தகம் 12% வளர்ச்சி வீதத்தில் ரூபாய் 21,750 கோடி எட்டும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

- வங்கியின் நிகர லாபம் ரூபாய் 90 கோடியாக எதிர்ப்பார்க்கப்படுகிறது.

- தாயகம் திரும்பிய பயனாளிகளின் எண்ணிக்கை இந்த வருடம் 50,000க்கு குறையாமல் இருக்கும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

- மத்திய கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் 2023–2024–ஆம் ஆண்டில் புதிய வங்கி கிளைகள் திறப்பது குறித்து புதிய வழிமுறைகள் செயல்படுத்தியுள்ளதால், புதிய வங்கி கிளைகளை அடுத்த நிதியாண்டில் திறப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 5.1.3. தாயகம் திரும்பியோர் அறக்கட்டளை

கடந்த மூன்று ஆண்டுகளில் தாயகம் திரும்பியோர் ரெப்கோ வங்கியின் மூலம் அளிக்கப்பட்ட உதவித் தொகைகளின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| வ. எண். | வருடம் | உதவித் தொகை (இலட்சங்களில்) |
|---|---|---|
| 1. | 2021–2022 | 907.00 |
| 2. | 2022–2023 | 781.00 |
| 3. | 2023–2024 | 911.00 |

## 6. அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்

அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் 1978–ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு நிறுவனமாக தொடங்கப்பட்டு வெளிநாட்டு வேலைநாடுநர்களை

வெளிநாடுகளில் பணியமர்த்தும் நோக்கத்துடன் செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனம் இந்திய கம்பெனிகள் சட்டம், 1956–ன்படி பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்நிறுவனம். இந்திய குடிபெயர்வோர் சட்டம் 1983–ன் கீழ் ஆட்சேர்ப்பு நிறுவனமாக பதிவு செய்யப்பட்டு வெளிநாட்டு வேலைகளில் பணியாளர்களை பணியமர்த்துவதற்கு இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் உரிமம் பெற்றுள்ளது. இந்நிறுவனத்தின் அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூபாய் 50 இலட்சம் மற்றும் செலுத்தப்பட்ட மூலதனம் ரூபாய் 15 இலட்சம் ஆகும்.

## 6.1. செயல்பாடுகள்

- வெளிநாட்டு வேலைநாடுநர்களுக்கு விழிப்புணர்வு மற்றும் பதிவுமுகாம்கள் நடத்துதல்.
- வெளிநாட்டு வேலையளிப்பவர் சார்பாக நேர்காணல் ஏற்பாடு செய்து இந்நிறுவனத்தில் பதிவு செய்துள்ள வெளிநாட்டு

வேலைநாடுநர்களை நேர்காணல் மற்றும் தேர்வு செய்வதற்கு கலந்து கொள்ளச் செய்தல்.

- வெளிநாட்டு வேலைக்கு தேர்வு செய்யப்பட்டோருக்கு சான்றிதழ் சான்றொப்பம் மற்றும் விசா பெறுவதற்கு உதவி புரிதல்.
- ECR நாடுகளுக்கான ECR கடவுச்சீட்டுகளுக்கு சென்னையில் உள்ள குடிபெயர்வோர் பாதுகாப்பு அலுவலகம் மூலம் குடியேற்ற அனுமதியை பெற்று தருதல்.
- தேர்வு செய்யப்பட்ட பணியாளர்களுக்கு வெளிநாடு செல்வதற்கு தேவையான பயண ஏற்பாடுகள் மேற்கொள்ளுதல்.

## 6.2. பதிவு

வெளிநாட்டு வேலைநாடுநர்கள் வெளிநாட்டு வேலை வேண்டி பதிவு செய்வதற்கேதுவாக URL: https://www.omcmanpower.tn.gov.in என்ற வலைதளம் இந்நிறுவனத்தால் உருவாக்கப்பட்டுள்ளது. 31.01.2024 அன்றமைந்தவாறு 5,426 நபர்கள் வெளிநாட்டு வேலை வேண்டி தங்களது பெயரைப் பதிவு செய்துள்ளனர்.

**6.3. பணியமர்த்தல்**

இந்நிறுவனம் தொடங்கப்பட்ட 1978–ம் ஆண்டு முதல் இதுவரை 11,031 நபர்களை வெளிநாட்டு வேலைகளில் பணியமர்த்தியுள்ளது. இந்நிறுவனம் 2023–2024–ஆம் நிதியாண்டில் 31.01.2024 அன்றமைந்தவாறு 131 நபர்களை சவுதி அரேபியா, குவைத் மற்றும் ஓமன் ஆகிய நாடுகளில் பணியமர்த்தியுள்ளது.

**6.4. வருவாய்**

2023–2024–ஆம் நிதியாண்டில் 31.01.2024 வரையிலான அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் தணிக்கைக்கு முந்தைய வருவாய் ரூபாய் 71.97 லட்சம் மற்றும் தணிக்கைக்கு முந்தைய நஷ்டம் ரூபாய் (–)49.11 இலட்சமாகவும் கணக்கிடப்பட்டுள்ளது.

**6.5. புதிய முயற்சிகள்**

- அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்துடன் இணைந்து, 15 நர்சிங் கல்லூரிகளில்

இறுதியாண்டு செவிலிய மாணவர்களுக்கு OET பயிற்சியினை வழங்கியுள்ளது.

- விண்ணப்பதாரர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பினைப் பெறுவதற்கு உதவியாக அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் கைபேசி செயலியினை மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் அவர்கள் 07.02.2024 அன்று துவக்கி வைத்தார்.

- இந்நிறுவன இணையதளத்தில், சேவைக் கட்டணத்தை செலுத்துவதற்கான கேட்வே (Payment Gateway) உருவாக்கப்பட்டுள்ளது.

## 7. முடிவுரை

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அயலகத் தமிழர்கள் நலன் மற்றும் முகாம்வாழ் இலங்கைத் தமிழரின் நலன்களுக்காக பல்வேறு திட்டங்களை அறிவித்துள்ளார். இத்திட்டங்கள் அயலகத் தமிழர் நலனுக்காகவும், முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்காகவும் பொது மற்றும் மறுவாழ்வுத்

துறையால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆற்றல்மிகு தலைமையின் கீழ் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மறுவாழ்வு முகாம்களில், இலங்கைத் தமிழர்கள் கௌரவமான, பாதுகாப்பான, மேம்படுத்தப்பட்ட வாழ்க்கை வாழ்வதை உறுதி செய்யும் விதமாக தமிழகத்தில் அவர்களுக்குப் போதுமான இருப்பிட வசதி, குடிநீர், மின்சாரம் போன்ற அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளதுடன், அவர்களுடைய கல்வி மற்றும் வாழ்க்கைத் தரம் மேம்பாடு அடைய அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.

மேலும், கல்வி, வேலைவாய்ப்பு, வணிகம் மற்றும் வியாபாரம் காரணமாக அயல்நாடுகளுக்குச் சென்றுள்ள அயலகத் தமிழர்கள் நலன் காத்திடவும், தமிழ் மொழியின் தொன்மை, வரலாறு, கலை, இலக்கியம், பண்பாடு மற்றும் கலாச்சாரத்தின் பெருமைகளை நிலைப்படுத்துவதுடன், அடுத்த தலைமுறைக்கும்

கொண்டு செல்லும் பணிகளுக்காகவும் புலம்பெயர் தமிழர் நலவாரியம் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இவ்வாறு அயலகத் தமிழர் மற்றும் முகாம்வாழ் இலங்கைத் தமிழர் நலன் காக்கும் பொருட்டு இந்த அரசு அக்கறையுடன் முனைப்போடு செயல்பட்டு வருகிறது.

**செஞ்சி கே.எஸ். மஸ்தான்,**
**சிறுபான்மையினர் நலன்**
**மற்றும் வெளிநாடுவாழ் தமிழர்**
**நலத்துறை அமைச்சர்.**

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை – 600 001.